**ஆகஸ்ட் - 19**

**"பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள்." - 1தெச 5 : 22**

**எவ்வகையான தீமையையும் விட்டு விலகுங்கள் (புதுமொழிப் பெயர்ப்பு)**

பொல்லாங்கான எல்லாவற்றையும், அவைகள் எவ்வகையானாலும், அவைகளைத் தடுக்க வேண்டும், எதிர்க்க வேண்டும் என்பது இதன் புத்திமதியாகும். பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள் என்பது மற்றுமொரு கருத்து. இந்தக் கருத்து அப்போஸ்தலன் மூலத்தில் சொல்லியிருப்பதைவிட வேறுபட்டது. ஆனாலும் இவைகள் ஒரு நியாயமான தத்துவத்தை வர்ணிக்கின்றன. அவைகள் எவ்வகையாக இருந்தாலும், நிச்சயமாக நாம் பொல்லாங்கான காரியங்களிலிருந்து விலகுவது மாத்திரமல்லாமல், நமது சிநேகிதரோ அல்லது அண்டையிலுள்ளவர்களோ பொல்லாங்கான காரியங்கள் என்று தவறாக எண்ணுகிறதும், ஆனால் நாம் நல்லதென்று அறிந்திருக்கிறவைகளையும் கூட செய்வதிலிருந்து கூடுமானவரை விலக வேண்டும். எவ்வகையான பொல்லாங்கை மட்டுமல்ல, ஆனால் கர்த்தருக்காகவும் சத்தியத்திற்காகவும் நமக்குள்ள செல்வாக்கு உயர்வாக இருக்கத்தக்கதாக, பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் கூட தவிர்க்க வேண்டும் என்று தெளிந்த புத்தியுள்ள ஆவி கற்பிக்கிறது. **- Z ’03, 26(R 3135)**

நாம் பழைய மொழிபெயர்ப்பையோ அல்லது புது மொழிபெயர்ப்பையோ ஏற்றுக்கொண்டாலும், அதில் சிறு வித்தியாசம் தான் இருக்கிறது. ஏனென்றால் இரண்டும் ஏற்றுக்கொள்ளுவதற்கும் அப்பியாசிப்பதற்கும் தகுதியான ஒரு கருத்தைக் கொடுக்கின்றன. நிச்சயமாகவே நீதியை நேசிக்கிறவர்களாகவும், அக்கிரமத்தை வெறுக்கிறவர்களாகவுமிருக்கிற நாம் மிகச் சிறியதாயிருந்தாலும், எவ்வகையான அக்கிரமத்தையும் விட்டு விலகுவோம். அதுபோல அது எவ்வளவு குற்றமற்றதாயிருந்தாலும், நாம் பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுவோம். முந்தினது தவறானதினாலே அதை விலக்குவோம். பிந்தினது, நமக்கும் மற்றவர்களுக்கும், அதைத் தவிர்க்காவிட்டால், அதினாலே தீங்கு ஏற்படலாம் என்கிற காரணத்தினாலே, அதையும் விலக்குவோம். பிந்தினது நன்மைக்காக தேவனுடைய சில பிள்ளைகளுக்கிருந்த செல்வாக்கைக் கொடுக்கக் காரணமாயிருந்திருக்கிறது. அது பலவீனரையும், தவறுகிறவர்களையும் இடறுவதற்கும் காரணமாயிருந்திருக்கிறது. இந்த இரண்டு கட்டளைகளையும் அப்பியாசிப்போமானால் பாக்கியவான்களாயிருப்போம். **- P ’26, 109.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**யாத் 23:7; 1கொரி 6:18; 8:1-13; எபே 4:25-32; 2கொரி 8:20,21; 1தெச 4:3,12; பிலி 4:9; ரோம 14:1-23; 2தீமோ 2:21-23.**

**கோபுர வாசிப்பு : Z ’10, 392 (R 4728)**

**வினாக்கள் : இந்த வாக்கியத்தின் சம்பந்தமாக இந்த வார அனுபவங்கள் எவை? அவை எவ்வாறு சந்திக்கப்பட்டன? அவற்றின் பலன்கள் எவை?**